REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—6 (7 காசுகள்) ★ வெளியூரில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 15உ செவ்வாய் (30—7—57) ★ ★ வெளியூர்: ஆடி 16உ புதன் (31—7—57) [இதழ் 38

மக்கள் சபைக் குழு கண்காணிக்கும்!

தொடர்ந்து 60 நாட்கள் சபைக் கூட்டங்களுக்கு வராமல் இருக்கும் உறுப்பினர்கள், அப்படி வராமலிருப்பதற்கு சபையின் அனுமதியைப் பெறாமல் இருந்தால், அந்த உறுப்பினர்களின் பதவி காலியானதாக மக்கள் சபை அறிவிக்கலாம் என்று அரசியல் சட்டம் கூறுகிறது.

இதன்படி, சபைக்கு வராமலிருப்போரைக் கவனிப்பதற்காக சபைத் தலைவர் 15 பேர் கொண்ட ஒரு குழு அமைத்திருக்கிறார்; அதன் முதல் கூட்டம் இன்று நடைபெற்றிருக்கிறது.

சபைக்கு வராமலிருக்க அனுமதிகோரும் உறுப்பினர்களின் மனுக்களை இந்தக் குழுதான் பரிசீலிக்கும்.

சட்ட சபை நுழைவால் கழகம் பெற்ற வெற்றிகள்

சம்பளம் பெற்றுக்கொண்டு நாட்டில் சுற்றிவரும் உறுப்பினர்கள் இப்போது மன்றத்திலிருந்து அகல முடியவில்லை

கலகலப்பும் சுறுசுறுப்பும் சட்டமன்றத்தில் தாண்டவமாடுகின்றன

காலை நேரக் கூட்டத்திற்குக் காமராசரும் வருகிறார்

மந்திரி சுப்பிரமணியம் நிலை குறித்து அண்ணா விளக்கம்

சென்னை, ஜூலை 30—

"முன்பு ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்த காலத்தில், 'கரை போட்ட வேட்டியையும், புடவையையும் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும்' என்று சட்ட சபையிலும், மேல் சபையிலும் எல்லாக் கட்சி உறுப்பினர்களாலும் கோரிக்கை எழுப்பப்பட்டு, தீர்மானம் ஒன்று உருவாக்கப்பட்டு டெல்லிக்கு அனுப்பப்பட்டது; 'எங்கள் கை கட்டப்பட்டு இல்லை' என்று பெருமை பேசுகிறாரே நிதி அமைச்சர் சுப்பிரமணியம்—அவர் தன்னுடைய நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கூறுமாறு கோருகிறேன்—சட்டசபையும், மேல் சபையும் சேர்ந்து ஒருமிக்க நிறைவேற்றிய தீர்மானத்தை டெல்லி என்ன செய்தது? 'ஏற்றுக்கொண்டோம்' என்று பதில் வந்ததா? தீர்மானத்தைக் கிழித்துப் போட்டு, 'இப்படியா தீர்மானம்? எப்படிப் போடலாம்?'—என்று கேட்க, 'இனி போடமாட்டோம்' என்று இவர்கள் கூறியதின் அர்த்தமென்ன? 'அதிகாரம் டில்லியிடம் இல்லை' என்று பொருள்? 'அமைச்சரின் கை கட்டப்படவில்லை' என்று பொருள்?

"கணவனும்—மனைவியும் கட்டிலறையில் இருக்க, சன்னல் வழியே பாம்புவர, மனைவி எழுந்து விளக்கைத் தூண்டி அங்கும் இங்கும் தேடும்போது கணவன் எழுந்து, தரையில் கால் வைக்காமல் கட்டிலின்மீது நின்றுக்கொண்டு, 'அங்கே பார்—இங்கே வால் தெரிகிறது; பயப்படாதே—எனக்கொன்றும் பயமில்லை' என்று சொன்னால் என்ன அர்த்தம்?

"அந்த நேரத்தில் இவர்கள்—'எங்கள் மானம் போயிற்று; மரியாதை போயிற்று; இனி இந்த வேலை வேண்டாம்' என்று கூறியிருந்தால், டில்லி அவ்வாறு மிரட்டியிருக்குமா?

"இது மட்டுமல்ல; இன்னொரு சம்பவத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 'சென்னைக்கு ரூ. 400 கோடி ஒதுக்கவேண்டும்' என்று நிதி அமைச்சர் டில்லியிடம் கேட்டார்; கிடைத்ததா? என்ன நடந்தது. மூக்கறுபட்டார்கள்; முகத்திலே கரி பூசப்பட்டது; முக்காடிட்டு மூலையில் அமர்த்தப்பட்டனர்—என்று அவர்கள் மொழியிலேயே கூறவேண்டும் என்றால் கூறுவேன்; ஆனால் நான் அப்படிக் கூற விரும்பமாட்டேன்—விரும்பவுமில்லை! 'கிடைத்த ரூ. 200 கோடியுடன் வெட்கப்பட்டு தலைகுனிந்து வீடு திரும்பினார்கள்' என்று மட்டும் கூறுவேன். இது உண்மையா இல்லையா என்பதை அமைச்சர் சுப்பிரமணியத்தைக் கேளுங்கள்.

"நிலைமை இப்படி இருக்க, 'அதிகாரம் டெல்லியிடம் இல்லை; எங்கள் கைகள் கட்டப்பட்டு இல்லை' என்றால், இதை எப்படி நம்புவது? இன்றைய அமைச்சரவையை - நேரு விரும்பினால் - குடியரசுத் தலைவரிடம் சொல்லி, கவர்னருக்குத் தாக்கீது அனுப்பி, கலைத்துவிட முடியும்; இல்லையா என்று கேளுங்கள். அதனால்தான், 'டில்லியில் அதிகாரம் இருக்கிறது' என்று உறுதியாக—பழைய சம்பவங்களைக் கொண்டு—உள்ள நிலையைக்கொண்டு வெளிப்படையாக நான் கூறுகிறேன். இதை நிதி அமைச்சர் ஏன் மறுக்கவேண்டும்?

"நான் மட்டுமா இவ்வாறு கூறுகிறேன்; சுப்பிரமணியம்கூட ஒருசமயம் சொன்னாரே—'இந்தியாவைத் தொழில்மயமாக்குவதில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டுள்ளது'—என்று! சொன்னாரா இல்லையா என்று கேளுங்கள். 'நாட்டின் வரிப் பணத்தில், வடக்கே அதிகம் செலவழிக்கப்படுகிறது'—என்று, மறைந்த குமாரசாமி இராசா கூறவில்லையா? 'தென்னாடு புறக்கணிக்கப்பட்டுள்ளது'—என்று பொருளாதாரப் பேராசிரியர் டாக்டர் தாமஸ் சொல்லவில்லையா? 'மாநிலங்கள் சாதாரண நகராட்சி, மாவட்ட ஆட்சி மன்றங்களைப் போல் நடத்தப்படுகின்றன'—என்று ஆச்சாரியார் சொல்லுகிறாரே!"

—இவ்வாறு, அண்ணா அவர்கள், 27—7—57-ல், சென்னை—பெரம்பூரில், 'டாக்டர் சத்தியவாணிமுத்து பகுத்தறிவு மன்ற'த்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் பேசியதாவது:—

"அண்ணாதுரை சொன்னால் கேட்கமாட்டீர்கள் — தள்ளிவிடு! அன்பழகன் சொன்னால் அலட்சியப்படுத்து! ஆனால், ஆச்சாரியார் சொல்லுகிறாரே! பல காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்களே! அவர்கள் எல்லாம் என்ன படிக்காதவர்களா? அறிவில்லாதவர்களா? ஒன்றும் தெரியாதவர்களா? மந்திரி சுப்பிரமணியம் மட்டும்தானா எல்லாம் தெரிந்தவர்?

"நேற்று முன்தினம் வெளிவந்த 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு ஒப்புக்கொள்கிறதே—'வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது என்பது உண்மைதான்; ஆனால் அதைப் பற்றி இப்போது ஆராய்வது நல்லதல்ல' என்று! ஆனால், எப்போதும் வேண்டாம் என்று அந்த ஏடு கூறவில்லையே! உண்மை என்பதை மறுக்கவில்லையே!

"அமைச்சர் சுப்பிரமணியம்கூட நான் சொன்னதை மறுத்தா பேசினார்? 'இப்போது வேண்டாம்; 10 ஆண்டுகள் சும்மா இருங்கள்' என்றுதானே சொன்னார்! 'நாட்டுப்பிரிவினை கூடாது; நீங்கள் செய்வது நாசவேலை; அதை நிறுத்தாவிட்டால்—கைவிட மறுத்தால் நானே ஒடுக்குவேன்'—இப்படியா சொன்னார்? 'பத்து ஆண்டுகள் சும்மா இருங்கள்' என்றுதானே சொன்னார்? 11-வது ஆண்டில் எனக்கு லைசென்ஸ் தானாகவே தந்துள்ளார் என்றுதானே அதற்குப் பொருள்? 'இங்கே 5 ஆண்டுகள் நான் பதவியில் இருக்கவேண்டும்; பிறகு அங்கே 5 ஆண்டுகள் பதவியில் இருக்க விடுங்கள்—என் வேலை முடிந்துவிடும்; பிறகு உங்கள் வேலையை ஆரம்பித்துக் கொள்ளுங்கள்' என்றுதானே அவர் கூறியதின் பொருள்? இன்று இதை இதோடு நிறுத்திக் கொள்கிறேன்; பிறகு அவசியமேற்பட்டால் படிப்படியாக அவர் பேசியதின் உண்மையை எடுத்துச் சொல்வேன். அவர்களிடம் எந்த அளவுக்கு அரசியல் நாகரீகம் இருக்கிறதோ, அதை பொறுத்துத்தான் என் பேச்சும் இருக்கும்."

"நான் கேட்கிறேன்—'நாட்டுப் பிரிவினை கூடாது என்கிறீர்களே, நாடு பிரியாததால் நன்மை என்ன? பிரிந்தால் நஷ்டமென்ன?' என்று!

"இன்று டில்லிக்கும் சென்னைக்கும் உள்ள உறவு என்ன? இங்கே வசூலிக்கப்படும் கொழுத்த வரி எல்லாம் டில்லியைச் சேருகிறது; இது உண்மையா இல்லையா? கொழுத்த ஆட்டை எடுத்துக் கொண்டபின், வெறும் காலும், வாலும்தான் நமக்குத் தரப்படுகிறது.

"இதைவிட்டு வேறு விஷயத்தைப் பாருங்கள். பெரிய பெரிய தொழிற்சாலைகள், அணைகள் எல்லாம் வடக்கே கட்டப்படுகிறது. இதுதான் போகட்டும்; நமக்கு வேலையாவது கொடுத்தார்களா? பயிர் செய்வதற்கு தண்ணீராவது உண்டா? படிக்க விரும்புவோர் பற்றியாவது கவலை உண்டா? இதில் நாம் எதைச் செய்ய விரும்பினாலும் டில்லியின் அனுமதி வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். அமைச்சருக்கும் இதை வெளியே சொல்லமுடியாவிட்டாலும், அவர் நிச்சயம் அறிவார் என்பதும் எனக்குத் தெரியும். நீங்களும் அதைப்பற்றி சந்தேகப் படவேண்டாம். எனவே, நாங்கள் உள்ளேயும் நன்றாகத்தான் பணியாற்றுகிறோம்; வெளியேயும் நல்லமுறையில்தான் பணியாற்றுகிறோம்."

★

விழாத் துவக்கத்தில் அண்ணா அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"அறிவும் ஆற்றலும் நிறைந்த சில நண்பர்கள் டாக்டர் சத்தியவாணிமுத்து அம்மையார் பெயரால் ஒரு பகுத்தறிவு மன்றத்தை ஏற்படுத்தி, அதைதிறக்கும் வாய்ப்பினை எனக்களித்தமைக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்; இந்தப் பகுத்தறிவு மன்றத்தை மகிழ்ச்சியுடன் திறந்துவைக்கிறேன்; இந்த மன்றத்தின் அரிய பணியின் மூலம் இந்த வட்டாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பெரும் அளவில் பேராதரவு கிடைக்குமென்றும் நம்புகிறேன்.

"நான் பெருமைக்காகக் கூறவில்லை—நாட்டு மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் கவனித்து வருகிறார்கள். சட்ட சபையில் கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்கள்; சோஷலிஸ்டுகள் இருக்கிறார்கள்; இன்னும் பல கட்சிகள் இருக்கின்றன. ஆனால் அவர்களின் நடவடிக்கைகளை நாட்டு மக்கள் கவனிக்கவில்லை. இதனை 'நாங்கள் உயர்ந்தவர்கள்—அவர்கள் தாழ்ந்தவர்கள்' என்ற அடிப்படையில் நான் கூறவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் மக்களின் மதிப்பைப் பெற்றுள்ளது என்பதற்காகத்தான் அவ்வாறு கூறுகிறேன்.

மாமியார் நிலையில் காங்கிரஸ் இருக்கிறதா?

"நிலைமை இப்படியிருந்தும், தி. மு. க.-வை ஒரு நல்ல எதிர்க்கட்சி என்று காங்கிரஸ் கூறவில்லை. எப்படி ஒரு மாமியார் தன்னுடைய மருமகளை நல்ல மருமகள் என்று கூறுவதில்லையோ, அப்படித்தான் இன்றைய ஆட்சியாளரும், எதிர்க்கட்சியை நல்ல கட்சி என்று கூற விரும்பவில்லை. 'நீங்கள் அந்த மாமியாரின் பேச்சையும் கேட்க வேண்டாம்; கனிவுடன் பேசும் கணவனின் பேச்சையும் கேட்க வேண்டாம்; நாங்கள் சமைத்த பண்டங்களைச் சுவைத்துப் பார்த்து எங்களுடைய 'கைராசி'யைப் பற்றி கூறுங்கள்' என்றுதான், 'சட்ட சபைக்கு சென்று என்ன செய்தீர்?' என்று கேட்பவர்களுக்குக் கூற விரும்புகிறேன்.

"போட்டி விளையாட்டுகளில், 8 அடி தாண்டக்கூடியவன், 2 அடி அதிகம் குதித்துக்காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்வான்; இன்று அரசியலில் 1½ அடிகூட அதிகம் தாண்ட முடியாதவர்கள் '60 அடி தாண்டுபவர்கள் இருக்கிறார்கள்' என்கின்றனர்; 'எங்கே?' என்றால், 'இங்கில்லை; எங்கோ இருப்பதாகக் கூறிப் பெருமைப்படுகின்றனர்.

பொறுப்பற்றவர்களா நாங்கள்?

"தி. மு. கழகம் அந்த அளவுக்குக் குறைந்துவிடவில்லை; உண்மையில் தி. மு. கழகம் பயனற்ற கட்சி என்றால், அதிலே இருப்பவர்கள் மட்டமானவர்கள் என்றால், சட்ட சபையிலே அவர்களுக்கு இடம் ஏன்? மாதம் ரூ. 150 சம்பளம் தரப்படுவதேன்?

"தோழர் க. அன்பழகன் அவர்கள் கூறிய புகாரைப்பற்றி அரசாங்கம் என்ன செய்தது? அலட்சியபடுத்தியதா? இல்லை. நாங்கள் பொறுப்பற்றவர்கள் என்றால், சர்க்கார், குழு அமைத்து விசாரணைக்கு ஏற்பாடு செய்வார்களா?

இலாப நோக்கம் கொண்டவர்கள்!

"காங்கிரஸ் முன்பு இருந்ததைப் போல இல்லை; உண்மையில் மாறிவருகிறது. அந்த மாற்றத்தை நான் வரவேற்கிறேன். ஏதோ ஒருசில புதிய காங்கிரஸ்காரர்கள்தான் 'பத்தினி வேடம்' போடுகிறார்கள். இன்றையக் காங்கிரஸ், இருட்டிலே ஆந்தை—சேற்றிலே எருமை போல இலாப நோக்கம் கொண்ட சில அரசியல் வாதிகளின் இடமாகி விட்டது. அவர்களுக்கெல்லாம் இதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஏசலையும் தூற்றலையும் தாங்கி வளர்ந்தோம்

"திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப்பேசமட்டும்தான் தெரியும் என்று கருதாதீர்; ஏசவும் தெரியும்; ஆனால், அந்த நிலை கூடாது என்றுதான் விட்டுவிட்டோம்.

"எங்கள் கழகம் ஏசலையும், தூற்றலையும், தொல்லைகளையும் தாங்கிக்கொண்டுதான் இன்று வளர்ந்துள்ளது. நாங்களும் கெடவில்லை—மக்களும் கெட்டுவிடவில்லை. அதற்கு இந்தக் கூட்டமே ஆதாரமாகும்.

குழந்தையின் அருமை தெரிந்தவர்கள்!

"நான், நேற்று பேசினேன்—வந்தீர்கள்; இன்று பேசுகிறேன் — வந்துள்ளீர்கள்; பேசுவதை ஆவலுடன் கேட்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 30—7—57 செவ்வாய்

இலங்கை தமிழர் வெற்றி

சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி' என்ற சட்டத்தை நிறைவேற்றி வைத்ததின் மூலம் அத்தீவில் வாழ்ந்துவரும் தமிழ் மக்களை வலிய வம்புக்கிழுத்துவிட்டார் இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா. அதன் பலனாக, சிங்கள மொழிக்கு சட்டப்படி வழங்கப்பட்டுள்ள உயர் நிலையை, தங்கள் தமிழ் மொழிக்கும் வழங்கியாக வேண்டுமெனத் தீவிரமாகக் கோரலாயினர் தமிழ் மக்கள்.

இலங்கைப் பிரதமர் சட்டமாக்கிய சிங்கள ஆட்சி மொழி சட்டத்தில், தமிழ் மொழி விலக்கலை மட்டுமே தமிழ் மக்கள் காணவில்லை. அவ்வேற்பாட்டின் மூலம், தங்களின் எதிர்காலமே இருள் சூழ்ந்துவிட இருப்பதைத் தமிழ் மக்கள் தெளிவாகத் தெரியலாயினர்.

ஆட்சித் துறையில் தமிழ் மொழிக்கு இடமளிக்க மறுத்து சிங்கள மொழியைத் திணிப்பதில், தங்கள் எதிர்காலம் பற்றி தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அச்சம், தமிழர்களே மிகுதியாக உள்ள வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்ற பிரதமர் பண்டாரநாயகா தீவிரமாக எடுத்துக்கொண்ட முயற்சி, மேலும் உறுதிப்பட்டு உரம் பெறலாயிற்று.

பெருந்தொகையினராக தமிழ் மக்கள் வாழும் வடக்குக் கிழக்குப் பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்றுவதில் பிரதமர் காட்டிய ஆர்வத்திலிருந்து, தமிழ் மக்களை நிரந்தரமான சிறுபான்மையினர்களாக ஆக்கி, தமிழர்கள் இன்று அனுபவித்து வரும் அரசியல் நிலையை அவர்களிடமிருந்து பறித்துக்கொள்ளவே பிரதமர் திட்டமிட்டிருக்கிறார் என்ற முடிவிற்குத்தான் நடுநிலையாளர் எவரும் வந்து தீருவர். எனவே, பிரதமரின் குடியேற்ற ஏற்பாட்டால் நேரடியாகத் தாக்குற இருக்கும் இலங்கை தமிழ் மக்கள், மேற்குறித்தவாறு பிரதமரின் போக்கை உணர்ந்து கொண்டதில் வியப்பொன்றும் இல்லை.

சிங்கள மொழிபோல் தமிழ் மொழிக்கும் ஆட்சிமொழி நிலை பெறவும், பிரதமரின் நச்சுத் தன்மையுடைய குடியேற்ற ஏற்பாட்டைத் தடுத்து நிறுத்தவும் பிரதமரிடம் கலந்துபேச பெடரல் கட்சியினர் முன்வந்தனர்; அதற்கான முயற்சியையும் மேற்கொண்டனர்.

பெடரல் கட்சியினர் நான்கு கோரிக்கைகளை வெளியிட்டனர்: அதாவது, (1) தமிழுக்கு ஆட்சி மொழி நிலை; (2) தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் சுயாட்சி நடைபெறுவதற்கேற்ற கூட்டு ஆட்சி முறையை ஏற்படுத்தல்; (3) மிகுதியாக தமிழர்கள் உள்ள பகுதிகளில் சிங்களவர் குடியேற்றத்தைத் தடுத்தல்; (4) இலங்கை குடி உரிமை ஆகிய நான்கு கோரிக்கைகளை வெளியிட்டனர் பெடரல் கட்சியினர்.

ஓராண்டு காலத்திற்குள், மேற்படி நான்கு கோரிக்கைகளையும் ஒப்புக்கொண்டு, அவைகளை நடைமுறைக்குக் கொண்டுவர பிரதமர் இணங்க மறுப்பாரானால், அமைதியான அறப்போரை மேற்கொள்ளுவது என பெடரல் கட்சி, கோரிக்கைகளை வெளியிட்டபொழுதே அறிவித்திருந்தது. அதன்படி ஆகஸ்டு திங்களில் அறப்போரில் ஈடுபடுவது என்று, அதற்கான வகையில் தமிழ் மக்களை உருவாக்கிக்கொண்டு வந்தது அக்கட்சி.

பெடரல் கட்சியின் மேற்படி கோரிக்கைகளை, அக்கோரிக்கை வெளியான நாள் முதற்கொண்டே துச்சமாக மதித்து எள்ளி நகையாடிவந்த இலங்கைப் பிரதமர், அறப்போராட்டத்திற்காகக் குறிப்பிட்ட நாள் நெருங்க நெருங்க, தமது ஆரம்பப் பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள்ளத் தொடங்கினர். தமிழ் மக்களால் துவங்கப்படப்போகும் அறப்போரை முறியடிக்க பாதுகாப்பு அணி இருக்கிறது—இராணுவப் படை உள்ளது என்றெல்லாம் அதிகாரக் குரலில் அச்சுறுத்திவந்த பிரதமர், அந்த நிலையிலிருந்து பெயர்ந்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகும்.

தமிழ் மக்களின் அறப்போரை முறியடிக்க சிங்கள மக்களைக் கொண்ட - சட்ட ஒப்புதல் பெறாத கட்சிப் படை ஒன்றைத் திரட்டப் போவதாகக்கூட பிரதமர் பூச்சாண்டி காட்டினர். இப்பூச்சாண்டி கண்டு தமிழ் மக்கள் உறுதி குலைந்துவிடவில்லை. அடக்குமுறைகள் அனைத்தையும் எதிர்த்து நின்று அறப்போரை மேற்கொள்வது என்று தமிழ் மக்கள் சூளுரைத்துக் கொண்டனர்.

இவ்வளவு அச்சுறுத்தலுக்குப் பிறகுதான் பெடரல் கட்சியினரை சந்திப்பதும், அவர்கள் உள்ளக்கிடக்கையை உணர்ந்துகொள்ளுவதும் பிரதமருக்கு சாத்தியமாயிற்று. அதுவுமன்றி, ஒரேயடியாக தமிழர்களின் கோரிக்கையைப் புறக்கணித்துவிடாது, தமிழ் மொழி அளவிலாவது ஓரளவு கோரிக்கைக்கிணங்குவதும் பிரதமரால் முடிந்தது.

சிங்கள மொழி போன்று முழு ஆட்சி மொழி நிலை தமிழ் மொழிக்கு ஏற்படவில்லை என்றாலும், தமிழ் மக்கள் மிகுதியாக வாழும் பகுதியின் ஆட்சிமொழியாக தமிழ் மொழி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்வொப்புதலின்கீழ், நடைமுறையில் தமிழ் மொழிக்கு புது நிலை ஏற்பட்டு இருக்கிறது. இது தமிழ் மக்களின் வெற்றி என்பதில் ஐயமில்லை. இதைத் தமிழ் மக்கள் வரவேற்கத்தான் செய்வர்.

தமிழ் வழங்கும் பகுதியில் சுயாட்சி நடைபெறும் முறையில் கூட்டாட்சியை உருவாக்குவது என்ற தமிழர் கோரிக்கையை அப்படியே ஒப்புக்கொள்ள பிரதமர் முன்வரவில்லை என்றாலும், ஏற்பட்டுள்ள உடன்பாட்டின்படி, இனி அமைக்கப்பட இருக்கும் வட்டார அலுவல் குழுவின் மூலம் மேற்படி விருப்பம் நிறைவு பெறும் என்று நம்பப்படுகிறது.

கூட்டாட்சி அமைப்பில் இது ஒரு புதுவிதம் என்றுதான் இதைக் கூற வேண்டும். இப்புது ஏற்பாட்டிற்காக இனி செய்யப்பட இருக்கும் விதிமுறைகளைக் கொண்டுதான், இப்புது ஏற்பாடு, தமிழ் மக்களின் விருப்பத்தை எந்த அளவு நிறைவேற்றக்கூடும் என்பதை வரையறுக்க முடியும்.

குடி உரிமை வழங்கலும், சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்தலும்பற்றி முன்னேற்றம் எதுவுமில்லை. இவை இரண்டும் பற்றிய முடிவில்தான், இலங்கை தமிழர்கள்—சிங்களவர் இடையில் இருந்து தீரவேண்டிய நட்புறவு ஏற்படுவதும் ஆக்கம் பெறுவதும் அமைந்திருக்கிறது. தமிழர்களின் ஒற்றுமையும், கட்டுப்பாடும், உறுதிப்பாடும்தான் அவ்விரண்டிலும் வெற்றியைத் தேடித் தரவேண்டும்.

'தனி தமிழரசு பெறுவதே இறுதி இலட்சியமாகும்'

'ஒப்பந்தம் இடைக்கால ஏற்படுதான்'

ஆகஸ்டு போராட்டத்தைக் கைவிடுவது பற்றி தமிழரசுக் கட்சி மாநாட்டில் விளக்கம்

ஒரு 'இடைக்கால ஏற்பாடு' என்ற வகையில், இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகாவும், தமிழரசுக் கட்சித் தலைவர்களும் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு உறுதி செய்வதாகவும், உத்தேசிக்கப்பட்டிருந்த ஆகஸ்டு போராட்டத்தை நிறுத்திக்கொள்வது என்றும், பாட்டிக்கோலாவில் கூடிய தமிழரசுக் கட்சி மாநாடு தீர்மானித்திருக்கிறது.

அதேபோது, 'கட்சியின் இலட்சியம், ஒரு பெடரல் யூனியன் கீழ் தனித் தமிழ் மொழி அரசு காண்பதுதான்' என்பதையும் தீர்மான மூலம் தமிழரசுக் கட்சி வற்புறுத்தியிருக்கிறது.

ஜனநாயகக் காங்கிரஸ் தலைவர்கள் வரவேற்பு

"பெடரல் கட்சியினர் சர்க்காருடன் செய்துகொண்ட ஒப்பந்தம் தமிழுக்கு அங்கீகாரம் பெறுவது, சிங்கள மயமாக்கும் போக்கைத் தடுப்பது, பிரதேச சுதந்திரம் பெறுவது என்ற விவகாரங்களில் தமிழர் பெற்றுள்ள ஒரு பெரும் முன்னேற்றமாகும்" என்று, இரண்டு ஆண்டுகளுக்கு முன் பிரிந்துவிட்ட இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர்களான ஏ. அஜீஸ், எஸ். தொண்டமான் ஆகிய இருவரும் வரவேற்றுள்ளனர்.

இருவரும் பிரிந்துவிட்ட பிறகு ஒன்றுபட்டுப் பேசுவது, இந்த விவகாரத்தில்தான் முதல் முறையாகும்.

அரிசியைப்போல்

சர்க்கரையும் முக்கியமானதாம்!

அமைச்சரின் கூற்று

சென்னை, ஜுலை 27—

1951—52-ம் ஆண்டில் மொத்தம் 13,36,493 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்ததாம்.

1956—57-ல் மொத்தம் 13,55,000 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி நடைபெறுகிறதாம்.

1951—52-ம் ஆண்டில் 326 ஏக்கர் நிலத்தில் மட்டுமே கரும்பு பயிரிடப்பட்டதாம்.

1956—57-ம் ஆண்டில் 8,000 ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிடப்படுகிறதாம்.

க. அன்பழகன் :—"இப்படி நெல் பயிரிடப்படவேண்டிய நிலங்களை கரும்பைப் பயிரிட மாற்றப்படுவதால், மக்களுக்குத் தேவைப்படும் அரிசிக்குப் பஞ்சமாகிறது என்பதை அரசாங்கம் உணருகிறதா?"

அமைச்சர் :—"அரிசி எவ்வளவு முக்கியமோ, அவ்வளவுக்கு சர்க்கரையும் முக்கியமானது என்றுதான் அரசாங்கம் கருதுகிறது. இதனால் உணவுப் பஞ்சம் ஏற்படும் என்று யாரும் கவலைகொள்ளத் தேவையில்லை."

சென்னையில் உள்ள அசோக்-லேலண்ட் மோட்டார் தொழிற்சாலையில், இன்னும் இரண்டாண்டுகளுக்குள் கனரக பஸ்கள் உற்பத்தி செய்யப்படும் என்று மக்கள் சபையில் தொழில் மந்திரி மனுபாய் ஷா கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் நாட்டுத் தியாகிகளுக்கு நினைவுச் சின்னங்கள்!

சென்னை அரசாங்கத்தின் முயற்சி

சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழாவை யொட்டி, தமிழ் நாட்டுத் தியாகிகளுக்கு நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்த சென்னை அரசாங்கம் முனைந்திருக்கிறது.

திரு. வ. உ. சிதம்பரனாருக்கு நினைவுச் சின்னம் அமைக்க திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப்பிடாரத்திலுள்ள அவருடைய வீட்டை அரசாங்கம் வாங்கியுள்ளது. ஆகஸ்டு 7-ந் தேதியன்று சென்னை முதலமைச்சர் ஒட்டப்பிடாரத்தில் நினைவுச் சின்னத்துக்கான அஸ்திவாரக் கல் நடுவார்.

பாபநாசத்துக்கருகிலுள்ள கலியாண தீர்த்தக் கட்டத்தில் திரு. வ. வெ. சு. அய்யரின் நினைவுச் சின்ன மண்டபமும், திருப்பூர் இரயில் நிலையத்துக்கருகில் திருப்பூர் குமரனுக்கு நினைவுச் சின்னமும் அமைக்கப்படும்.

செம்பியத்தில் கைத்தொழில் தொழிலாளர்களுக்காக அரசாங்கம் கட்டும் குடியிருப்பு திரு. வி. க. அவர்களின் நினைவுச் சின்னமாக அர்ப்பணிக்கப்படுவதுடன், அவரது உருவச் சிலையும் நிறுவப்படும்.

சேலம் மாவட்டம் பாப்பாரப்பட்டியில் ஆதாரக் கல்விப் பள்ளி ஒன்றை நிறுவி, அதை திரு. சுப்பிரமணிய சிவாவின் நினைவுச் சின்னமாக அர்ப்பணிக்கப்படும்.

ஆலை அரசர்களுக்குப் பரிந்து பேசுவதே தொழிலா?

கைத்தறியை அடிக்கடி மிரட்டுவது ஏன்?

மத்திய மந்திரி மொரார்ஜியின் நோக்கம்தான் என்ன?

ஆலை அரசர்களுக்குப் பரிந்து பேசுவதையே மந்திரி மொரார்ஜி தொழிலாகக் கொண்டுவிட்டாரா? இந்த சந்தேகத்தை அடிக்கடி கிளப்பும் வகையில் அவர் பேசி வருகிறார்.

கைத்தறியாளர்களை அடிக்கடி மிரட்டுகிறார்! 'உங்களால் உற்பத்தியின் இலட்சிய அளவை எய்த முடியுமா?' எனத் திரும்பத் திரும்பக் கேட்கிறார்—அவர்களது கஷ்டங்களை எடுத்துரைத்து அவற்றிற்குப் பரிகாரம் கேட்டால் மட்டும், அதுபற்றி ஏதும் செய்யாத இந்த மந்திரி!

"இரண்டாம் திட்ட காலத்தில் கைத்தறியாளர், அம்பர் சர்க்கா நூல் கொண்டு 30 கோடி கெசம் துணி நெய்வது உள்பட மொத்தம் 100 கோடி கெசம் துணி உற்பத்தி செய்ய முடியுமா?" என்று கேட்டிருக்கிறார், பம்பாய் கூட்டம் ஒன்றில்!

அதேபோல, கைத்தறிக்கு 'ரிபேட்' வழங்கும்முறை நீடிக்க வேண்டுமா? அதற்குச் செலவாகும் தொகையை வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிடலாகாதா என்றும் கைத்தறியாளர் சிந்திக்க வேண்டுமாம்—கேட்டிருக்கிறார் மொரார்ஜி!

கேட்டதோ 1,37,000 டன்; கிடைப்பதோ 49,000 டன்

டில்லியிடமிருந்து இரசாயன உரம் கிடைப்பதுபற்றி சென்னை மந்திரி

சென்னை, ஜுலை 27—

இந்த ஆண்டிற்கு, 1,37,000 டன் அம்மோனியம் சல்பேட் என்ற இரசாயன உரம் தருமாறு டெல்லி சர்க்காரை மாநில சர்க்கார் கேட்டிருக்கிறது என்றும், இதில் 70,000 டன் ஏப்ரல் முதல் செப்டம்பர்வரை உள்ள காலத்திற்கு என்றும், இதில் இதுவரை டெல்லி சர்க்கார் 49,000 டன் உரமே தந்து உதவியிருக்கிறது என்றும் மந்திரி பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

191 கொலை குற்றங்கள்

சென்னை, ஜுலை 27—

கடந்த மூன்று மாத காலத்தில் மொத்தம் 191 கொலைக் குற்றங்கள் சென்னை மாநிலத்தில் ஏற்பட்டுள்ளன என்றும், மொத்தம் 118 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்றும் சட்டசபையில் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

குழந்தைகளுக்குத் தனி மருத்துவ விடுதி

ஏற்படுத்துவதற்கு இயலாதாம்!

'குழந்தைகளுக்குத் தனியாக மருத்துவ விடுதிகள் ஏற்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை' என்று அமைச்சர் மாணிக்கவேலர் சட்டசபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது குறிப்பிட்டார்.

கிராமப்பஞ்சாயத்து தலைவர் தேர்தல்

'நடைமுறையை மாற்றக் கூடாது'

'சர்க்காரின் முறை மாற்ற உத்தேசம் ஆபத்தானது'

சட்டசபையில் எம். செல்வராஜ் விளக்கம்

சென்னை சட்டசபையில், ஸ்தல ஸ்தாபனங்கள் மானியத்தின்மீது கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, கழக உறுப்பினர் எம். செல்வராஜ் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தென் ஆற்காடு மாவட்டம் மிகவும் பிற்போக்கான மாவட்டமாக இருக்கிறது; நல்ல 'ரோடு' வசதிகள் அந்த மாவட்டத்தில் கிடையாது. சில கிராமங்களுக்குப் போவதற்குக்கூட வழியில்லாமல்—பாலங்கள் இல்லாமல் மழை காலத்தில் அந்த இடங்கள் தீவுகள் போன்று காட்சியளிக்கின்றன. அந்த அளவில் அங்குள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்கள். மழை காலத்தில் அந்தக் கிராமங்களிலுள்ள மக்கள் நகரப் புறங்களுக்கு வரவேண்டுமானால் அந்தத் தண்ணீரில் நீந்திக் கொண்டுதான் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கு இவ்விதம் இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் பாலங்கள் போட்டுக் கொடுத்தால் இப்பேர்ப்பட்ட கஷ்டங்கள் நீங்கும்.

மேலும் அங்கு, விருத்தாசலத்திலிருந்து இராசேந்திரப்பட்டணம் வரையிலும் போகக்கூடிய பாதையில் வெள்ளார் பாலம் ஒன்று போடுவதற்கு வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி, 'காஸ்வே' ரூ. 3 இலட்சம் செலவில் வேலை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. பெரிய மழை வந்தால் இந்தக் 'காஸ்வே'யை எடுத்துக்கொண்டு போய்விடும். ஆதலால் ஸ்திரமாக இருக்கக்கூடிய விதத்தில் ஒரு பாலம் அமைக்க வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான் அது நீடித்துநிற்கும். ஆகவே, இந்த விஷயத்தில் அமைச்சரவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

"இன்னும் அநேக கிராமங்களில் கிராமப் பஞ்சாயத்துகள் அமைக்கப்படாமல் இருந்துவருகின்றன. அந்த இடங்களில் எல்லாம் கிராமப் பஞ்சாயத்துகளை உடனடியாக அமைக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"இனிமேல் வரக்கூடிய கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல் முறை, அங்கத்தினர்கள் மூலமாக நடைபெறும் என்று சொல்லப்படுகிறது; இனி வரக்கூடிய தேர்தலில் இந்த முறை ஏற்பட்டால் அது இலஞ்ச ஊழல்கள் அதிகரிப்பதற்கு ஏதுவாகும்; அது மட்டுமின்றி, பெரும் பணக்காரர்கள்தான் அப்பதவிக்கு வரமுடியுமே தவிர, தொழிலாளர்களும் ஏழைகளும் வரமுடியாது. மேலும், அந்தக் கிராம நலனில் அக்கரைகொண்டு இருக்கக்கூடியவர்களும் அந்தத் தேர்தலில் வெற்றிபெற்று வரமுடியாது. ஆகவே, இந்தமுறை கூடாது. ஏற்கனவே மக்களால் தேர்ந்தெடுப்பது போன்ற முறையின் மூலம் இந்தத் தலைவர் தேர்தலும் நடைபெறவேண்டும் என்றும், அவ்விதம் இருந்தால்தான் பணக்காரர்களுடைய ஆக்கிரமிப்பும், ஆதிக்கமும் இருக்காது என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு இதற்காகச் சட்டம் கொண்டுவரும்பொழுது அமைச்சரவர்கள் இதைக் கவனத்தில் வைத்து அதற்கேற்றபடி சட்டம் இயற்றவேண்டும்என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

"மேலும், பஞ்சாயத்துகளுக்கு வேண்டிய செலவுகளில் 'பிரிவு'களின் மூலம் இத்தனை சதவிகிதம் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் சில குறிப்பிட்ட செலவை, செய்ய வேண்டிய இடங்களில் செய்ய முடிவதில்லை. ஆதலால், சில 'பிரிவு'களில் அதிகமாகச் செலவு செய்வதற்காக விதிகளை வகுக்க வேண்டும்.

"சில பஞ்சாயத்துகளில் குடித் தண்ணீர் வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதற்காக வேண்டிய 'Protected water supply scheme' ஏற்படுத்தவேண்டுமென்று அங்கு 1938-லிருந்து தண்ணீர் வரி வசூலித்து வருகிறார்கள். இதைப் பற்றி சர்க்காரிடம் முறையிட்டும் பத்து வருடகாலமாக இதுவரையிலும் எந்தவித ஏற்பாடும் செய்ததாகத் தெரியவில்லை. பஞ்சாயத்திலிருந்து ரூ. 2 இலட்சம் கொடுப்பதற்கு முன்வந்தார்கள். இதைக் கூடிய சீக்கிரமே ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"இப்போது நெய்வேலியில் சுரங்க வேலை ஆரம்பித்திருப்பதால் அங்கு அதிகமாக மக்கள் குடியேற ஆரம்பித்திருக்கின்றனர்; ஆகவே, இப்போது தண்ணீர் கஷ்டம் பெரிய அளவில் இருக்கிறது. ஆகவே, உடனடியாக இந்தக் குடித் தண்ணீர்த் திட்டத்தைக் கொண்டு வந்தால், குடித்தண்ணீர் இல்லாமல் இருக்கிற குறை நீங்கும்.

"பாலங்களை எல்லாம் அகலப் படுத்தப்போகிறோம்' என்றும், 'அதற்காகத் தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறது' என்றும் அமைச்சரவர்கள் கூறியுள்ளார். இப்போது புவனகிரியிலிருந்து சிதம்பரம் போகும் மார்க்கத்திலுள்ள பாலம் அகலம் மிகக் குறைவாக இருக்கிறது. அந்தப் பாலத்தில் ஏதாவது பஸ் சென்றால், பக்கத்தில் ஆள் போக முடியாது. ஆகவே, இந்தப் பாலத்தை உடனடியாக அகலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"சில இடங்களில் பஞ்சாயத்துகளால் 'ரோடு'கள் போட முடியாத நிலை இருக்கிறது. ஆதலால், இவ்வேலைகளை 'நெடுஞ்சாலை இலாகா'விடம் ஒப்படைத்தால் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து ரோடு போடுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, இதற்கும் வேண்டிய உத்தரவுகள் போடவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்"

ஓட்டேரியில் உள்ள ஓடை?

'சென்னை ஓட்டேரியில் உள்ள ஓடையைச் சீர்திருத்தவேண்டுமென இவ்வாண்டு ஏப்ரலில் ஒரு தூதுக் குழு அரசாங்கத்திடம் வற்புறுத்தியிருக்கிறது' என்று சட்டசபையில்அமைச்சர்தெரிவித்தார்.

விற்பனை வரிச் சட்டம்

'பொது மக்களைப் பாதிக்கிறது'

சட்டசபையில் கழக உறுப்பினர்கள் விளக்கம்

சென்னை, ஜூலை 27—

விற்பனை வரிச் சட்டத்தை அமுல் நடத்த ஒரு திருத்த மசோதா இன்று சட்டசபையில் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாவிட்டால் அவசரச் சட்டத்தின் மூலமே விற்பனை வரியை அமுல் செய்யமுடியும் என்பதை தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் விளக்கியதும், சட்டசபை உறுப்பினர்கள், சட்டத்தை ஆராய்வதற்குப் போதிய காலம் தரப்படவில்லை என்று மன்றத் தலைவருக்கு எடுத்துக் கூறினர்.

சபையின் ஒழுங்கு முறையை நிர்ணயிக்கும் குழு ஒப்புக்கொண்ட ஒரே காரணத்தை நிதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பிறகு விவாதம் நடைபெற்றது.

கழக உறுப்பினர்களான தோழர் க. அன்பழகன், எம். செல்வராஜ் ஆகியோர் விவாதத்தில் கலந்துகொண்டு, இந்தத் திருத்தச் சட்டம் பொதுமக்களைப் பாதிக்கிறது என்றும், குறிப்பாக கைத்தறி நெசவாளர்களைப் பாதிக்கிறது என்றும் எடுத்துரைத்தனர்.

இறுதியில் மசோதாவை செலக்ட் குழு பரிசீலனைக்கு அனுப்பவேண்டும் என்ற பிரேரணை நிறைவேறியது.

விற்பனை வரியை ஆராய்வதற்குக் குழு !

எம். பி. சுப்பிரமணியம், எம். பி. சாரதி நியமிக்கப்பட்டுள்ளனர்

சென்னை, ஜூலை 27—

சென்னை அரசாங்கத்தின் விற்பனை வரிச் சட்டத்தை ஆராய்ந்து முடிவுகளை அறிவிக்க 19 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை நியமிக்க சட்டசபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் கழக உறுப்பினர்களான தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம், எம். பி. சாரதி இருவரும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சட்டசபை விதிகள் திருத்தக் குழு

தோழர்கள் எம். செல்வராஜ், எம்.பி. சுப்பிரமணியம் நியமனம்

சென்னை, ஜூலை 28—

சென்னை சட்டசபை விதிகளைத் திருத்துவதற்கான யோசனை கூற 20 பேர் கொண்ட குழு ஒன்று சட்டமன்றத் தலைவர் கிருஷ்ணாராவ் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

கழக உறுப்பினர்களான தோழர்கள் எம். செல்வராஜ் எம். பி. சுப்பிரமணியம்ஆகியோர் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

திருக்கோயிலூர் பொதுக்கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன் கருத்துரை

காஞ்சி-கல்யாணசுந்தரம், சி. நடராசன் ஆகியோர் கலந்துகொண்டனர்

திருக்கோயிலூர் நகர தி. மு. கழகக் கூட்டம் தோழர் ச. அரங்கநாதன் தலைமையில் 12—7—57-ல் நடைபெற்றது. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மற்றும் தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர் சி. நடராசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதுவரையில் திருக்கோயிலூர் கண்டிராத அளவில் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

தோழர்கள் முஸ்தபா, அன்பரசு, குமாரசாமி, அண்ணாதாசன் ஆகியோர் பேசினர்.

பின்னர் கள்ளக்குறிச்சி சி. நடராசன் எம். எல். ஏ. அவர்கள் பேசியதாவது :—

"சட்டமன்றத்தில் இன்று தமிழ் மணம் கமழ்கிறது. நாட்டின் குறைகளை எடுத்துக்காட்டி நல்லமுறையில் கழக உறுப்பினர்கள் வாதாடுவதை நீங்கள் செய்தித் தாள்கள் மூலம் தெரிந்து கொண்டிருப்பீர்கள்; நீங்கள் தரும் ஆதரவைக்கொண்டு இனி மேலும் நாங்கள் போராடமுடியும்.

"அரசியலார் ஏழை மக்களுக்கு இன்றியமையாததாக உள்ள சில பொருள்களின் மீது விதித்துள்ள வரிகளைக் கண்ணியத்துடன் கண்டித்துக் கடமையாற்றுகிறோம் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

"குடிசையில் வசிக்கும் ஏழைத் தாய், தன்னுடைய குழந்தை பசியால் வாட்டமுறும்போது செய்யும் சில 'சைகை'களை, (அதிகாரம் இல்லாத சென்னை அமைச்சரவை போன்று) புரிந்துகொள்ளாத நிலை ஏற்படுமானால், என்றைக்கோ ஒருநாள் குழந்தையை இழந்துவிட வேண்டியதுதான்; அதுபோன்ற நிலை தென்னகத்திற்கு ஏற்படக்கூடாது என்று ஆச்சாரியார் போன்றவர்கள் டில்லிப் பேராசுக்கு எடுத்துக் கூறிவருகின்றனர்; இதையே நாங்களும் சட்டசபையில் சுட்டிக்காட்டி வருகிறோம். இதில் ஏதேனும் தவறிருக்குமா என்பதை பொதுமக்களாகிய நீங்களே. சிந்திக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

அடுத்து, தோழர் காஞ்சி—கலியாணசுந்தரம் அவர்கள், கடந்த பத்து ஆண்டுகளில் சர்க்கார், மக்கள் பெருக்கத்தைத் தவிர வேறு எதைப் பெருக்கியிருக்கிறது என்று வினவினர். 'மக்களிடை சுதந்திர எண்ணத்தை வளர்ப்பது தவறா?' என்று கேட்டுவிட்டு அவர், இன்னும் இரயில்களில் ஆடு மாடுகளைப்போல் அடைபட்டு மக்கள் பிரயாணம் செய்யும் நிலை மாறவில்லை; மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களைச் சுரண்டி, பின்னர் அவைகளுக்கு பிச்சையளிப்பதுபோன்ற நிலை இன்னும் நீடிப்பது எதற்காக என்று விளங்கவில்லையென்றும் குறிப்பிட்டார்.

உழைப்பின் மூலம் உயிர் வாழும் தமிழன், சிங்களத்தில் மூட்டைப் பூச்சிபோல் நசுக்கப்பட்டு வருவதை கேட்க வக்கில்லாத சென்னை நிதி அமைச்சர், தி. மு. கழகத்தின் நாட்டுப் பிரிவினைக் கொள்கை முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது என்று கூறுவது விந்தையாக இருககிறது என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், மாடு திமிராமல் இருக்க மூக்கணங்கயிறு தேவைப் படுவதுபோல்,நாட்டில் நல்லாட்சி நிலவ ஆளும் கட்சிக்கு ஒரு எதிர்க்கட்சி அவசியம் தேவை என்று குறிப்பிட்டுவிட்டு, சட்டசபையில் தி. மு. கழகம் ஆற்றும் பணியின் சிறப்பையும், தூய தமிழ் நடைமுறை அம்மன்றத்தில் நிலவுவதையும் விளக்கினர். வள்ளுவர் கூறியதுபோல்—பேசத் தெரிந்தவனுடைய பேச்சைக் கேட்டு உலகம் அவன் பின்னால் செல்லும் என்பதுபோல்—தி. மு. கழகத்தின் இலட்சிய விளக்கத்திற்கு மக்களின் ஆதரவு திரளுகிறது என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் காங்கிரசின் தேர்தல் கால 'திருவிளையாடல்'களை விளக்கி, 'தி. மு. கழகத்தினர் சினிமாக் கட்சிக்காரர்கள்-அவர்கள்சட்டசபைக்குச் சென்று என்ன செய்துவிட முடியும்?' என்று கேலி பேசியவர்களுக்கு சர்க்காரே கையாண்ட சில நடைமுறைகளை உதாரணம் காட்டி, அதன் இலட்சணங்களை விளக்கினர்.

மேலும் அவர், வடநாட்டின் உற்பத்திப் பொருள்களுக்கு தென்னாடு 'மார்க்கெட்' ஆக இருக்கும் அவல நிலையையும், வடவரின் 'பின்னோடி'களாக இம்மாநில அமைச்சரவை இயங்குவதையும் தெளிவாக்கினர்.

பின்னர் அவர், 'நேரு வளர்ந்ததுபோல் நாடு வளரவில்லை' என்றும், டில்லிப் பேரரசின் வரிக் கொடுமைகளை விளக்கியும் விரிவுரையாற்றினர்.

திருக்கோயிலூர் தி. மு. க. செயலாளர் தோழர் ஜே. வி. கீர்த்தி அவர்களால், பொதுச் செயலாளர் அவர்களுக்கு ஓர் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது.

அன்று மாலை ரிசர்வ் போலீசார் சூழ்ந்து நிற்க, தோழர் ச. அரங்கநாதன் அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

ஆசிரியர்களுக்கு இந்த நிலையா !

பல ஆண்டுகள் உழைத்தும்

க. அன்பழகன் கேள்விக்கு அமைச்சர் தந்த பதில்

சென்னை, ஜூலை 27—

"நகர சபை நடத்திவரும் பள்ளிகளில் பல ஆண்டுகள் உழைத்தும், ஆசிரியர்களின் வேலை உறுதிப்படுத்தாமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதைக் குறித்து நடவடிக்கை எடுக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா?"

என்று சட்டசபையில் தோழர் க. அன்பழகன் கேட்ட கேள்வி ஒன்றுக்குக் கல்வி அமைச்சர், நேர்முகமான பதிலளிக்காமல், தனிக் கேள்வி கேட்கச் சொன்னார்.

★

14—7—57-ல், திண்டிவனத்தில் நடைபெற்ற பாராட்டுப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் எடுக்கப்பட்ட படம்.

★

சென்னையில் அண்ணா விளக்கவுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கின்றீர்கள். அதுமட்டுமா? 'வா, வா' என்றழைப்பவர்கள்; 'எப்போது வருவீர்?' என்று கேட்பவர்கள்; 'தேதி தாருங்கள்' என்று துடிப்பவர்கள்; 'எத்தனை முறை அழைத்தோம்; ஒருமுறையாவது வரக்கூடாதா?' என்று ஏங்குபவர்கள்; போகுமிடமெல்லாம் பாசத்துடன் பேசுபவர்கள்; கிராமங்களுக்குச் செல்லும் போது மக்கள் காட்டும் கனிவு — இவைகளெல்லாம் எதைக் காட்டுகிறது? உங்களுக்கல்லவா தெரியும் எங்களைப் பற்றி! முத்தமிடும் தாய்க்கு அல்லவா தெரியும் குழந்தையின் அன்பு! காலில் முத்தம், கையில் முத்தம், உதட்டில் முத்தம், முகத்தில் முத்தம்—இப்படி எத்தனை முத்தம் தருவாள் பெற்ற தாய்! பிள்ளையின் அருமை பற்றி பெற்ற தாய்க்குத் தெரிவதைப்போல, உங்களுக்கல்லவா தெரியும் எங்களைப் பற்றி! காமராசருக்கும், கக்கனுக்கும் எப்படித் தெரியும்? பிள்ளையே பெற்றெடுக்காத மலடி, 'என்னடீ, அதிசயமான குழந்தையை பெற்றுவிட்டாள்' என்றுதான் அங்கலாய்த்துக்கொள்வாள். அதே போலத்தான் இவர்களும், 'அண்ணாதுரை என்ன பேசிவிட்டான்? என்ன எழுதிவிட்டான்?' என்று கூறுகிறார்கள்.

"சாரீரம் கெட்டுப்போன பழைய பாடகனைப் பார்த்து, 'தண்டபாணி தேசிகர் எப்படிப் பாடுகிறார்?' என்று கேட்டால், 'பாட்டா அது? இராகம் உண்டா? தாளம் உண்டா?' என்றுதான் பேசுவார்கள். அதே நிலைதான் இன்று அரசியலிலும் உள்ளது. ஏதோ இவர்கள் எல்லாம் அதிகம் படித்தவர்கள் போலவும், நாம் ஏதும் அறியாதவர்கள் போலவும் எங்களைப் பற்றிக் குறை கூறுகிறார்கள்.

"இந்த நிலையை அல்ல நான் விரும்புவது—இந்த அரசியல் நிலை கூடாது என்று கூறுகிறேன். நாங்கள் கூறும் கருத்துக்களை அமைச்சர்கள் ஆராய வேண்டும். நாங்கள் என்ன சொல்கிறோம் என்பதைப் பற்றிச் சந்திக்க வேண்டும்; அத்தகைய நாகரீகமான அரசியல் வேண்டும். நான் விரும்பும் அந்த நிலைக்கு அவர்கள் இன்று பக்குவம் பெற்றுவருகிறார்கள் என்றே நம்புகிறேன்.

முறையை மாற்றிக் கொள்ள நேரிடும்?

"இதுவரையில் சட்டசபையில் எங்கள் குரலை மதித்துதான் அவர்கள் நடந்துகொள்கிறார்கள் — அவர்கள், இந்த முறையைமாற்றினால் நாங்களும் மாற்றிக்கொள்ள வேண்டிவரும்.

"முன்பெல்லாம் சட்டசபையில், முக்கிய பிரச்சினைகள் பற்றிப் பேசப்படும்போது 40, 50 பேர் கூட இருந்ததில்லையாம்; இது எதைக் காட்டுகிறது? சட்டசபை உறுப்பினர்கள் எந்த அளவு அரசியல் அறிவும், பொறுப்பும் பெற்றிருக்கின்றனர் என்பதைத் தானே காட்டுகிறது?

சட்டசபையில் நாம் நுழைந்த பிறகு!

"திராவிட முன்னேற்றக் கழகம் சட்டசபைக்குள் நுழைந்த பிறகு நிலைமை நிச்சயமாக மாறியுள்ளது. சட்டசபையில் கலகலப்பும், சுறுசுறுப்பும் உள்ளது; இது நமக்குக் கிடைத்த முதல் வெற்றி!

"நாம் இல்லாவிட்டால் சட்டசபை உறுப்பினர்கள் மாதம் ரூ. 150 சம்பளம் வாங்கிக்கொண்டு சட்டசபையிலே இருக்கமாட்டார்கள் — நாட்டிலே சுற்றிவருவார்கள்!

"முன்பு சட்டசபைக்குக் காமராசர் வருவதே அரிதாம்! ஆனால் இப்போது காமராசர், நாள் தவறாமல்—அதுவும் முக்கியமாகக் கேள்வி நேரத்திற்கு அதிகாலையிலே வருகிறார்; இது நமக்கு கிடைத்த இரண்டாவது வெற்றி!

"தேர்தலின்போது நாம், 'ஆட்சியாளருக்கு மூக்கணாங்கயிறாக இருப்போம்' என்று மக்களிடம் கூறினோம். பத்து ஆண்டுக் காலமாக ஆண்டுதோறும் புதுப் புது வரிகளை போட்டு வந்தவர்கள் நாம் சட்டசபைக்குச் சென்றதும் வரிபோடவில்லை; இல்லாவிட்டால் மத்திய அமைச்சர் டி. டி. கே. போட்டதைப் போல, வரிகளை அள்ளி வீசியிருப்பார்கள். இது மூன்றாவது வெற்றி!

கிடைத்த வெற்றிக்குள்ள தாரதம்மியம்!

"இந்தியாவில் உள்ள எல்லா ஏடுகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி—சில பாராட்டியும், சில கண்டித்தும் எழுதியுள்ளன; ஆனால் எல்லா ஏடுகளுமே நம்மைப்பற்றிக் கவனம் செலுத்தி எழுதியுள்ளனர்.

"ஒரு பெண்ணை எதிர்வீட்டு வாலிபன் பார்த்து 'நல்ல பெண்' என்று பாராட்டுவதற்கும், அண்டை வீட்டுக்காரன் பாராட்டுவதற்கும் வித்தியாசம் உண்டு. எதிர் வீட்டு வாலிபன் பாராட்டைப்போல, இங்கே இருக்கும் காங்கிரஸ்காரர் பாராட்டவில்லை; பாராட்டினாலும் அது அபாய அறிவிப்பு என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல! அண்டை வீட்டுக்காரர் பாராட்டு கிடைத்திருப்பது நமக்குக் கிடைத்த நான்காவது வெற்றி!

"இந்த முறை சட்டசபையில் மக்களைப் பாதிக்கும் சட்டம் எதும் நிறைவேற்றப்படவில்லை; இது ஐந்தாவது வெற்றி!

"ஒரு மாதமாக நடைபெற்ற சட்ட சபைக் கூட்டத்தில்நாங்கள் 15 பேரும், பலநாள்—பலமுறை பேசினோம்; பல கருத்துக்களை எடுத்துக் கூறினோம்.

ஏசியது போதும்— இனியும் வேண்டாம்

"காங்கிரஸ்காரர்களுக்கு ஒன்று கூறுவேன்—10 ஆண்டுகளாக ஏசினீர்கள் — பயன் இல்லை; நீங்கள் எதிர்பார்த்தது ஒன்று—நடந்தது வேறு! அதனால், இனியும் ஏசவேண்டாம் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

"'அழகாகப் பேசுவார்கள்—அடுக்குமொழியில் பேசுவார்கள்—மயக்கி விடுவார்கள்—அவர்கள் பேச்சைக் கேட்காதீர்' என்று கூறிவந்தீர்கள்!

"'அடுக்குமொழியாமே—அழகான பேச்சாமே—மயக்கிவிடுவார்களாமே—நாமும் கேட்டுப் பார்ப்போம்' என்றுதான் மக்கள் எங்கள் கூட்டத்திற்கு வந்தார்கள்; யாரும் எங்களை வெறுத்துவிடவில்லை.

"'ருசியான மாம்பழம்—வாங்காதீர்' என்றால் என்ன அர்த்தம்? அப்படித்தான், 'அழகான பேச்சு—கேட்காதீர்' என்பதும்!

"எனவே, இனியும் இம்மாதிரியான வாதங்கள் மூலம் மக்களை ஏமாற்றவேண்டாம்—மக்கள் எங்களை ஒதுக்கிவிடமாட்டார்கள் என்றும் கூற விரும்புகிறேன்.

நல்ல நாதத்தை மக்கள் கேட்கக்கூடாதா?

"திராவிட முன்னேற்றக் கழகம் பட்டி தொட்டிகளிலே, மூலை முடுக்குகளிலே நாள் தோறும் திறக்கப்படுகின்றன! ஆயிரக்கணக்கில் கூட்டங்கள் நடைபெறுகின்றன! இந்த நல்ல நாதத்தை மக்கள் கேட்கக்கூடாது என்றால், அதற்கு மூன்று வழிகள் உண்டு; ஒன்று—மக்களை செவிடர்களாக்க வேண்டும்; இரண்டாவது—எங்கள் சத்தத்தை மிஞ்சக்கூடியதாக சத்தம் போடலாம்; மற்றொன்று—எங்கள் சத்தத்தை அடக்கி, நல்ல சத்தம் போடலாம். அதை விட்டுவிட்டு, பெரியாரின் தாக்குதலுக்குப் பிறகும் வளர்ந்து, பலருடைய பகையையும் பொருட்படுத்தாமல், துன்பங்களைத் தாங்கிக்கொண்டு இந்த நிலையை தி. மு. கழகம் அடைந்துள்ளது என்றால், காங்கிரஸ்காரர்கள்—தெரிந்து சிலரும், தெரியாமல் ஒருசிலரும், மாறி சிலபேரும், ஓடி சிலபேரும் பேசி என்ன செய்யமுடியும்? ஏன் இந்த வீண் வேலை?

வெட்டிப் பேச்சு பேசுவதால் பயன் என்ன?

"திண்ணையில் உட்கார்ந்திருக்கிற ஒரு நொண்டி, தெருவிலே நடந்து செல்பவனைப் பார்த்து ஓட்டப் பந்தயத்திற்கு அழைப்பதுபோல் எங்களையும் அழைத்தால்—அதுவும், 'நொண்டிக்கு இரண்டு கால்களும் இல்லை' என்பதைப் பார்த்துவிட்ட பிறகா நாங்கள் பந்தயத்திற்கு வருவோம்!

"நான் எழுதுகிறேன், பேசுகிறேன்—காங்கிரஸ்காரரும் செய்யட்டுமே! யார் வேண்டாம் என்கிறார்கள்? இப்போது சட்டசபை கூட இல்லை; எழுதுங்களேன் பார்க்கலாம்; நானே நல்ல விலைக்கு அவற்றை விற்றுத் தருகிறேன். எனக்கு ஓய்வு இல்லை—கதை எழுத!

"இதைவிட்டுவிட்டு, எதோ கக்கன் எழுதிய புத்தகம் அமெரிக்காவில் படிக்கப்படுவதைப் போலவும், நிதி அமைச்சர் எழுதிய அரசியல் பொருளாதார நூலை பேராசிரியர் லாஸ்கி பார்த்துப் பெருமைப்படுவதைப் போலவும் 'இவர்கள் என்ன எழுதுகிறார்கள்? என்ன பேசுகிறார்கள்?' என்று கூறுவதில் பயன் என்ன?

"இன்றுவரை—இந்த நிமிடம் வரை நான் எழுதியதைத்தான் மந்திரி சுப்பிரமணியம் படிக்கிறாரே தவிர, அவர் எழுதியதை நான் படிக்கக் கொடுத்துவைக்கவில்லை. எனவே, காங்கிரஸ் ஏடுகள் எழுதுவதற்காக எங்களைக் கேலி செய்யும் இந்த வேலையில் ஈடுபடாமல் இருந்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அல்லல் தர நாங்கள் விரும்பாததேன்?

"நாங்கள் கூறுவதை அலட்சியப்படுத்தாமல் எங்கள் திட்டங்களை ஆராய்ந்து காங்கிரஸ் பொறுப்புடன் நடந்துகொள்ள முற்படவேண்டும். காமராசர் தலைமையில் அமைந்துள்ள இந்த மந்திரி சபை, மக்களுக்கு நன்மை செய்யும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது; நானும் மனதார நம்புகிறேன். அதனால் தான் அல்லல் தர விரும்பவில்லை.

நிதி அமைச்சரின் அரசியல் நாகரீகம்!

"நான் கடைபிடிக்கும் அரசியல் நாகரீகத்தையும் பாருங்கள்; அவர்கள் கடைபிடிக்கும் அரசியல் நாகரீகத்தையும் பாருங்கள்.

"நான் நேற்று சட்டசபையில், 'அமைச்சர்களிடம் ஆற்றல் இருக்கிறது; திறமை இருக்கிறது' என்றேன்; அதற்கு நிதி அமைச்சர் என்ன சொன்னார்? நான் பேசியது 'உளறல்' என்றார். எது உளறல்? ஒருவேளை நான், அமைச்சர்களை ஆற்றல் மிக்கவர்கள்—திறமை படைத்தவர்கள் என்றேனே—அது உளறலா? எண்ணால் புரிந்துக்கொள்ள முடியவில்லை! ஏனென்றால், நான் அங்கு பேசும்போது, 'அதிகாரம் டில்லியிடம் இருக்கிறது; இவர்கள் ஆட்டிவைக்கப்படுபவர்கள்' என்று கூறியது பொய் அல்ல!"

டெல்லி சர்க்கார் இறங்கி வருகிறது

ஊழியர் விரும்பும் வகையில் சம்பளக் கமிஷன் நியமிக்கப்படும்

புதுடில்லி, ஜூலை 29—

தபால்—தந்தி ஊழியர்களின் பிரதான கோரிக்கையான இரண்டாவது சம்பளக் கமிஷன் நியமிப்பதற்கு டெல்லி சர்க்கார் இணங்கக்கூடும் என்று தெரியவருகிறது.

அதாவது, ஊழியர்கள் விரும்புகிற வகையில், அந்தக் கமிஷனின் வேலைகள் வரையறுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

சர்க்கார், தபால் ஊழியர் சங்கத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டபின், நிலைமைகளை மீண்டும் பரிசீலித்து வருவதாகவும் தங்களின் முடிவை இந்த வார இறுதிக்குள் அறிவிக்கக்கூடும் என்றும் தெரியவருகிறது.

இலஞ்ச ஒழிப்பு நடவடிக்கை

சென்னை சர்க்கார் தகவல்

சென்னை, ஜூலை 29—

இலஞ்சம் வாங்கிய குற்றத்துக்காக 1957 மே மாதத்தில் ஒரு டெபுடி தாசில்தார்—மானேஜர், செங்கற்பட்டு கலெக்டர் அலுவலக குமாஸ்தா ஒருவர், ஒரு காட்டிலாகா ரேஞ்சர் ஆகியவர்கள் வேலையினின்றும் நீக்கப்பட்டனர். ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும், ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் கட்டாயமாக ரிடையராகும்படி செய்யப்பட்டனர். ஒரு போலீஸ் டெபுடி - சூப்பிரண்டெண்ட்டின் சம்பளம் ஓராண்டு காலத்துக்குக் குறைக்கப்பட்டது.

'மாநிலத்திலிருந்து எண்ணெய் வெளியேற அனுமதிக்கமாட்டோம்'

'எங்களைக் குறும்புத்தனத்தால் டெல்லி ஏமாற்றமுடியாது'

'மந்திரி சபை இராஜினமா செய்யவேண்டும்'

பொது வேலைநிறுத்தம் செய்து அசாம் மக்கள் குரல்

கௌஹாத்தி, ஜூலை 29—

இன்று அசாம் மாநிலம் எங்கும் நடைபெற்ற பொது வேலை நிறுத்தம் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது.

இந்தத் தகவலைத் தந்த எண்ணெய்த் தொழிற்சாலை செயற்குழு, 'உத்தேசத் தொழிற்சாலையை அசாமில் நிறுவுகிறோம்' என்று டெல்லி சர்க்காரால் திட்டவட்டமாக அறிவிக்கும் வரையில் தொடர்ந்து மக்கள் இயக்கம் நடைபெறும் என்றும் அறிவித்திருக்கிறது.

'இராஜிநாமாச் செய்க'

பொது வேலை நிறுத்தத்தின் முடிவில் மாலையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது; அதில், 'அசாம் மாநில மந்திரி சபை பதவியிலிருந்து விலக வேண்டும்' என்றும், 'அதன் மூலம் இந்த இயக்கத்தை தீவிரப் படுத்தவேண்டும்' என்றும் தீர்மானம் மூலம் கோரப்பட்டிருக்கிறது.

முடிவு மாறவில்லையே!

"பீகாரில் பிரௌனியிலும் அசாமில் கௌஹாத்தியிலும் தொழிற்சாலைநிறுவுவதற்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கிறோம் என்ற டெல்லியின் அறிவிப்பு, ஏற்கனவே அவர்கள் செய்திருந்த முடிவை எந்த வகையிலும் மாற்றுவதாக இல்லை.

குறும்புத்தனம்

"இந்த அறிவிப்பு, அசாம் மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படும் வஞ்சகமான குறும்புத் தனமாகும்"

என்றும் தீர்மானம் கூறுகிறது.

'எண்ணெய் வெளியேற அனுமதிக்க மாட்டோம்'

கூட்டத்தில் பேசிய போராட்டக் கமிட்டித் தலைவரான ஹரேஷ்வர் கோஸ்வாமி, 'இந்த மாநிலத்திலிருந்து எண்ணெய் வெளியேறுவதை—பிரம்மபுத்திரா நதியைத் தாண்டிச் செல்வதை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை' என்று முழங்கியிருக்கிறார்.

பல நகரங்களிலும்

மாநிலத்தின் பல நகரங்களிலும் பொது 'வேலைநிறுத்தம் அமைதியாக நடைபெற்றிருப்பதுடன், ஆங்காங்கே பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டு, 'இந்தப் பிரச்சினைமீது மந்திரி சபை இராஜினமாச் செய்ய வேண்டும்' என்று கோரியிருக்கின்றனர்.

சென்னை-தூளை ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பகம்

31—7—57 இரவு 9-மணிக்கு, படிப்பக மனையில், தோழர் டி. கே. இளங்கோ தலைமையில் படிப்பக செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

நெல்லிக்குப்பம் தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு:

1—8—57 மாலை 6-மணியளவில், நெல்லிக்குப்பம் மெயின் ரோடு, எண் 163 இல்ல மாடியில் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ